# 30-11-2023 செய்தி

## இயல்பை இழக்கும் இமயம்

**பின்னணி:**

- வளர்ச்சியின் பெயரில் இமயமலை தனது இயல்பை இழந்து வருவதாக கவனப்படுத்தப்பட்டு வருகிறது.
- விதிகளை மீறி கட்டப்படும் கட்டிடங்கள், நீர் மின் நிலையங்கள் போன்ற வளர்ச்சி பணிகளால் இப்பகுதி அதிக பாதிப்புக்கு உள்ளாகும் எனத்தெரிகிறது.

**காரணம்:**

- காலநிலை மாற்றம் காரணமாக, இமயமலைப் பகுதிகளில் வெப்பநிலை அதிகரித்து வருகிறது.
- –6 டிகிரி செல்சியஸ் முதல் –20 டிகிரி செல்சியஸ் வரை இருந்த சராசரி வெப்பநிலை, இப்போது –2 டிகிரி செல்சியஸாக குறைந்துள்ளதால், இங்கு உள்ள பனிப்பாறைகள் உருகுவதற்கு அதிக வாய்ப்புள்ளது.
- இப்பகுதிகளில் செயல்பட்டு வரும் நீர் மின் நிலையங்களால் பெரும் ஆபத்து ஏற்படவும் வாய்ப்புள்ளது.

**சமீபத்தில்:**

- இதற்கிடையில், உச்ச நீதிமன்றத்தின் தலையீட்டினால் 13 பேர் கொண்ட நிபுணர் குழுவை மத்திய அரசு நியமித்துள்ளது.

**தீர்வு:**

- மலைப் பிரதேசங்களில் அணைகள், உள்கட்டமைப்பு வசதிகள், நகரமயமாக்கல் ஆகியவற்றை மதிப்பிட, வழிகாட்ட, கண்காணிப்பதற்கான அரசின் கொள்கையும் அணுகுமுறையும் மாற வேண்டும்.
- இப்பகுதிகளின் தன்மையை உணர்ந்து போக்குவரத்தில் ஒழுங்குமுறையைக் கொண்டுவர வேண்டும்.
- ஒவ்வொரு 10 ஆண்டுகளுக்கும் மலைப் பகுதிகளில் மாறும் சூழ்நிலைக்கேற்ப, புதிய கொள்கை வழிமுறைகள் அறிவிக்கப்பட வேண்டும்.

## லெஜியன் ஆப் ஹானர்

- 1802 ஆம் ஆண்டு நெப்போலீயன் போனபார்ட் இந்த விருதை தோற்றுவித்தார்.
- பிரான்ஸ் நாட்டிற்காக மிகச் சிறந்த சேவை செய்பவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
- அந்நாட்டின் உயரிய விருதாக கருதப்படும் இது வெளிநாட்டவர்க்கும் வழங்கப்படுகிறது.
- அந்த வகையில் ககன்யான் திட்டத்தின் முன்னாள் இயக்குனர் வி.ஆர்.லலிதாம்பிகாவுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- பிரான்ஸ், இந்தியா இடையிலான விண்வெளி துறை தொடர்பான கூட்டு நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியதற்காக இவ்விருதை வழங்குவதாக பிரான்ஸ் அரசாங்கம் தெரிவித்துள்ளது.